**JUDICIAL MAGISTRATE COURT NO.II CHENGALPATTU**

**CC No.255/2020**
**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
*********

| | |
|---|---|
| IN THE COURT OF | : JUDICIAL MAGISTRATE NO.II CHENGALPATTU. |
| Deposition of witness for | : PW- 5 |
| Name | : Thiru.Chandrasekar |
| Father's Name | : வெங்கடேசன் |
| Village | : |
| Taluk | : |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 16.02.2021.

**முதல் விசாரணை -**

நான் வண்டலூரில் வசித்து வருகிறேன். நான் வண்டலூரில் ஓட்டல் கடை வைத்து நடத்தி வருகிறேன். கடந்த 23.03.2019 ல் சண்டை நடந்தது. எனது தம்பி அசா 1 வேலுக்கும் நீதிமன்றத்தில் ஆஜரில் இருக்கும் எதிரிகளுக்கும் சண்டை நடந்தது. சண்டையை கேள்விப்பட்டு நான் வண்டலூர் காவல் நிலையம் சென்றேன். காவல் நிலையத்திலும் சண்டை நடந்ததாகச் சொன்னார்கள். மேற்கொண்டு எனக்கு எதுவும் தெரியவில்லை. எனது தம்பிக்கு கையில் அடிபட்டிருந்தது. நான் இது சம்பந்தமாக எந்த ஆவணத்திலும் கையெழுத்து செய்யவில்லை. போலிசார் இது சம்பந்தமாக என்னை விசாரணை செய்யவில்லை.

**இந்நிலையில் இந்த சாட்சியை பிறழ்சாட்சியாக பாவித்து குறுக்கு விசாரணை செய்ய அரசு தரப்பில் அனுமதி கோரி அனுமதி அளிக்கப்பட்டது.**

**அரசு தரப்பு குறுக்கு விசாரணை -**

நான் எனது போலிஸ் விசாரணையில் கடந்த 22.03.2019 அன்று இரவு நானும் எனது உறவினர் லிங்கராஜ் என்பவரும் வண்டலூர் ஓட்டேரி காவல் நிலைய ஆய்வாளர் வண்டலூர் மேம்பாலத்தின் கீழ் உள்ள பானிபூரி கடையின் அருகில் வந்து அங்கிருந்த சிலரிடம் விசாரணை செய்து கொண்டிருந்தார். பானிபூரி சாப்பிட வந்த வண்டலூரைச் சேர்ந்த வேலு என்பவரை நெடுஞ்செழியன் மற்றும் லோகேஷ் ஆகியோர் கத்தியைக் காட்டி மிரட்டி வேலுவின் கழுத்தில் இருந்து 1 1|2 சவரன் எடையுள்ள டாலர் மற்றும் பொன் செயினைப் பறித்து கொண்டதாகவும் இது சம்பந்தமாக ஓட்டேரி காவல் நிலையத்தில் புகார் கொடுக்கப்பட்டதாகவும் வழக்கை பதிவு செய்து சம்பவ இடத்தை பார்வையிட்டு மகசர் செய்யப்பட்டபொழுது இரவு 11.45 மணியளவிலல் குற்ற

எண் 72|2019, ச|பி.394 உ|இ.397 இதச வழக்கில் தயார் செய்த பார்வை மகசரில் நானும் லிங்கராஜிம் கையெழுத்து செய்து விட்டு தற்பொழுது நீதிமன்றத்தில் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் அது சரியல்ல.

**குறுக்கு விசாரணை -** இல்லை.

**JUDICIAL MAGISTRATE COURT NO.II CHENGALPATTU**

**CC No.255/2020**
**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
*********

| | |
|---|---|
| IN THE COURT OF | : JUDICIAL MAGISTRATE NO.II CHENGALPATTU. |
| Deposition of witness for | : PW- 6 |
| Name | : Thiru.Parthiban |
| Father's Name | : துரைசாமி |
| Village | : |
| Taluk | : |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 16.02.2021.

**முதல் விசாரணை -**

நான் வண்டலூரில் வசித்து வருகிறேன். நான் வெல்டிங் வேலை செய்து வருகிறேன். அசா 1 வேலு என்னுடைய மாமா மகன் ஆவார். கடந்த 23.03.2019 அன்று என்னுடைய மாமா மகன் வேலு என்பவருக்கு அடிபட்டதாக கேள்விப்பட்டு ஓட்டேரி காவல் நிலையம் அன்றைய தினமே சென்றேன். அங்கு போலிசார் ஆவணத்தில் கையெழுத்து போடச் சொன்னார்கள். நானும் கையெத்து போட்டேன். என்னுடன் செல்வகுமார் என்பவரும் கையெழுத்து போட்டார். அந்த ஆவணத்தில் என்ன எழுதியிருந்தது என்று எனக்கு தெரியவில்லை. நீதிமன்றத்தில் தற்பொழுது என்னிடம் காட்டப்படும் ஒப்புதல் வாக்குமூலங்கள் மற்றும் கைப்பற்றுதல் மகசர்களில் உள்ள உள்ள முதலாவது கையெழுத்து என்னுடையது ஆகும். மேற்கண்ட கையொப்பங்கள் முறையே அசாஆ 2, அசாஆ 3, அசாஆ 4 மற்றும் அசாஆ 5 ஆக வழக்கில் குறியீடு செய்யப்படுகின்றன.

**இந்நிலையில் இந்த சாட்சியை பிறழ்சாட்சியாக பாவித்து குறுக்கு விசாரணை செய்ய அரசு தரப்பில் அனுமதி கோரி அனுமதி அளிக்கப்பட்டது.**

**அரசு தரப்பு குறுக்கு விசாரணை -**

நான் எனது போலிஸ் விசாரணையில் ஓட்டேரி காவல் நிலைய குற்ற எண் 78|2019, ச|பி.394 உ|இ.397 இதச வழக்கில் நெடுஞ்செழியன், த|பெ.ராஜா, லோகேஷ், த|பெ.சாமுவேல் ஆகியோரை கடந்த 23.03.2019 அன்று காலை 05.00 மணியளவில் கைது செய்து அந்த இருவரும் எந்த அச்சுறுத்தலும் துன்புறுத்தலும் ஆசை வார்த்தைகளும் இன்றி கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தில் சாட்சிக் கையெழுத்து செய்து விட்டு தற்பொழுது நீதிமன்றத்தில் பொய்யாக

சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் அது சரியல்ல. அதேபோல் கைப்பற்றுதல் மகசரிலும் சாட்சிக் கையொப்பம் செய்து விட்டு தற்பொழுது நீதிமன்றத்தில் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் அது சரியல்ல.

**JUDICIAL MAGISTRATE COURT NO.II CHENGALPATTU**

**CC No.255/2020**
**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
*********

| | |
|---|---|
| IN THE COURT OF | : JUDICIAL MAGISTRATE NO.II CHENGALPATTU. |
| Deposition of witness for | : PW- 7 |
| Name | : Thiru.Selvam |
| Father's Name | : கணேசன் |
| Village | : |
| Taluk | : |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 16.02.2021.

**முதல் விசாரணை -**

நான் வண்டலூரில் வசித்து வருகிறேன். நான் வெல்டிங் வேலை செய்து வருகிறேன். அசா 1 வேலு என்னுடைய மாமா மகன் ஆவார். கடந்த 23.03.2019 அன்று என்னுடைய மாமா மகன் வேலு என்பவருக்கு அடிபட்டதாக கேள்விப்பட்டு ஓட்டேரி காவல் நிலையம் அன்றைய தினமே சென்றேன். அங்கு போலிசார் ஆவணத்தில் கையெழுத்து போடச் சொன்னார்கள். நானும் கையெத்து போட்டேன். என்னுடன் பார்த்திபன் என்பவரும் கையெழுத்து போட்டார். அந்த ஆவணத்தில் என்ன எழுதியிருந்தது என்று எனக்கு தெரியவில்லை. நீதிமன்றத்தில் தற்பொழுது என்னிடம் காட்டப்படும் ஒப்புதல் வாக்குமூலங்கள் மற்றும் கைப்பற்றுதல் மகசர்களில் உள்ள உள்ள இரண்டாவது கையெழுத்து என்னுடையது ஆகும். மேற்கண்ட கையொப்பங்கள் முறையே அசாஆ 6, அசாஆ 7, அசாஆ 8 மற்றும் அசாஆ 9 ஆக வழக்கில் குறியீடு செய்யப்படுகின்றன.

**இந்நிலையில் இந்த சாட்சியை பிறழ்சாட்சியாக பாவித்து குறுக்கு விசாரணை செய்ய அரசு தரப்பில் அனுமதி கோரி அனுமதி அளிக்கப்பட்டது.**

**அரசு தரப்பு குறுக்கு விசாரணை -**

நான் எனது போலிஸ் விசாரணையில் ஓட்டேரி காவல் நிலைய குற்ற எண் 78|2019, ச|பி.394 உ|இ.397 இதச வழக்கில் நெடுஞ்செழியன், த|பெ.ராஜா, லோகேஷ், த|பெ.சாமுவேல் ஆகியோரை கடந்த 23.03.2019 அன்று காலை 05.00 மணியளவில் கைது செய்து அந்த இருவரும் எந்த அச்சுறுத்தலும் துன்புறுத்தலும் ஆசை வார்த்தைகளும் இன்றி கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தில் சாட்சிக் கையெழுத்து செய்து விட்டு தற்பொழுது நீதிமன்றத்தில் பொய்யாக

சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் அது சரியல்ல. அதேபோல் கைப்பற்றுதல் மகசரிலும் சாட்சிக் கையொப்பம் செய்து விட்டு தற்பொழுது நீதிமன்றத்தில் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் அது சரியல்ல.

**குறுக்கு விசாரணை** - இல்லை.

Sd. xxxxxx

Typewritten to my dictation in open court read over to the witness in tamil in the presence of the accused and admitted by the witness to be correct.

Sd. xxxxxx
Judicial Magistrate No.II
Chengalpattu.